நாள் -04.02.2026

**C.C. No.**42/2023

PW-1 சாரத பிரீத்தா, க/பெ. சுபாஷ்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 04th **day of February** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் M. com வரை படித்துள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய சமயம் கொரோனா கட்டுப்பாடுகள் அமலில் இருந்த காலம் என்றால் சரிதான். சிவா மற்றும் ஆறுமுகம் இருவரும் எனக்கு நன்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் அருகே உள்ள கல்லூரியின் பெயர் ஜெம் கல்லூரி. gem college அருகே சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு இருந்தது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்க எந்த தேதி மற்றும் எந்த நேரத்தில் சென்றேன் என்றால் அன்றைய தினமே இரவு 10 மணிக்கு சென்றேன். புகாரை போலீசார் சொல்ல சொல்ல நான் எழுதினேன் என்றால் சரிதான்.

2. நான் மேற்படி தாலிச் சங்கிலியை வாங்கியதற்கான ரசீது போலீசார் விசாரணையின் பொழுது கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். போலீசார் சொல்லித்தான் எதிரி தான் எனது தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.நான் முதல்விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் என்னுடைய தங்கச் சங்கிலி காணாமல் போகவில்லை என்றும் போலீசார் சொன்னதின் அடிப்படையில் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.04 19:45:34 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**